




திருவாரூர் மாவட்டம் கோவில்திருமாளத்தைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடி, திருவாரூர் மாவட்ட வேளாண் விற்பனை குழு முன்னாள் தலைவர் 102 வயது பெரியவர் கோ.தட்சிணாமூர்த்தி அவர்களை கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி கல்யாணம் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் குடவாசல் ஒன்றிய குழு முன்னாள் துணை தலைவர் ஆலத்தூர் ஜி.ஆர். பாண்டியன் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

### மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பாக

# 10ஆயிரம் பேருக்கு கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழங்கி சிறப்புரை!

மதுரை,ஜன.3-

மதுரை தெற்கு மாவட்ட கழக மகளிர் அணி சார்பாக கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் கீர்த்திகா தங்கபாண்டியன் ஏற்பாட்டில் திருப்பரங்குன்றம் தொகுதி அவனியாபுரம் பகுதியில் உள்ள 10ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர், சேடபட்டி மு.மணிமாறன் வழங்கி சிறப்புரையாற்றினார், அதன் விபரம்

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சி பெண்களுக்கான ஆட்சி முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் முதல் கையெழுத்தே மகளிர் விடியல் பேருந்து பயணத்திற்கான அறிவிப்பாக தான் இருந்தது.

மேலும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, மகளிர் சுய உதவி குழுவிற்கு மானியத்துடன் கடனுதவி, பெண்கள் முன்னேற்றத்திற்கு பல்வேறு வேலை வாய்ப்புகள் என நாடு போற்றும் வகையில் மற்ற மாநிலங்கள் நம் முதல்வர் திட்டங்களை பின்பற்றும் வகையில் எல்லோருக்கும் எல்லாம் எனும் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகிறார், மீண்டும் இரண்டாவது முறையாக நம் தலைவர் முதல்வர் ஆவார் என்பதில் மாற்றமில்லை என்பதற்கு இங்கு கூடியுள்ள பெண்கள் கூட்டமே எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என்று பேசினார்.

கூட்டத்திற்கு பகுதி செயலாளர் போஸ் ஈஸ்வரன், தொகுதி பொறுப்பாளர், சிவகாசி வனராஜா முன்னிலை வகித்தார்கள். வட்டச் செயலாளர் நேதாஜி ஆறுமுகம் வரவேற்றார்

மாமன்ற உறுப்பினர் குட்டி என்ற ராஜரத்தினம், கழக நிர்வாகிகள் பாலசுப்பிரமணியம், கருணாநிதி, வட்டக் கழகத் துணைச் செயலாளர் குமார், வட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்வமணி, பகுதி அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் கார்மேகம், மாணவர் அணி சிவா, வழக்கறிஞர் அணி அழகுமலை, திருப்பரங்குன்றம் கிழக்கு ஒன்றிய செயலாளர் தனபால், திருமங்கலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் தங்கபாண்டி, தெற்கு மாவட்ட மருத்துவர் அணி தெய்வேந்திரன்,

மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பிரமிளா பீமன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் காளிதாஸ், தலைமை கழக பாடகர் நாகூர் ஜெக்காரியா, கழக இளம் பேச்சாளர் இளம் கவி ராஜேஷ் உள்ளிட்ட கழக வட்டக் கழக நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர், பொதுமக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்றனர்.

